கதிரேசன் பேரில்
ஆனந்தக் களிப்பு

7715

[illegible]

உ

கடவுள் துணை.

கதிரேசன்பேரில்

ஆநந்தக்களிப்பு.

கதிர் காமத்துயேசல் கதிர்காமக் கும்மி

மங்களம் இவைகளடங்கியிருக்கின்றன.

இஃது

மதுரைச்சில்லா இராமநாதபுரம் சீர்மைசேகரம்

திருப்புல்லாணியிலிருக்கும்

தங்கம்முத்துராமலிங்கம் பிள்ளையவர்கள்

குமாரராகிய

இராமசாமியா பிள்ளையவர்கள்

இயற்றியதை,

மணிமங்கலம்

வடிவேலுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

பிடாரித்தாங்கல்

நாராயணசாமிமுதலியார் குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

சென்னை:

வித்யாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1910.

சென்னை பிரம்பூர் குயப்பேட்டை 65-வது செம்பர் வீதி.

P. N.

சுகந்த மூக்குத்தூள்.

இந்த பெயர்பெற்ற சுகந்த மூக்குத்தூளானது நூதனமா
கண்டு பிடிக்கப்பட்டதை வெகு பெயர்களால் வாங்கி உபயோகி
து ஆயிரக்கணக்கான நற்சாக்ஷி பத்திரம் பெற்றிருக்கின்றது. இந்
மேலான பெருமைதங்கிய தூளினால் தீரும் வியாதிகளாவன:—
ஜலதோஷம், பீனிசம், ஒற்றைத்தலைநோய், மண்டைக்குத்தல் கண்
ணிலுண்டாகும் எல்லா வியாதிகளையும், தீர்ப்பதுடன் கண்டத்தி
ற்கு மேற்பட்ட 96-வியாதிகளையும் மூளையைச்சார்ந்த வியாதிகளை
யெல்லாம் சொஸ்தப்படுத்திவைக்கும் எந்த மூக்குத்தூளும் இத
னை பிரபல்யமுடையதாயும் முற்கூறிய வியாதிகளை கண்டிக்கக்
கூடியதாயும் எவ்விடத்திலும் கிடைக்காது கீழ்காணும் கம்பெனி
யாரால் செய்யப்படுகிறது இந்ததூளானது சாதாரண புகையிலைத்
தூளை 10-15-தடவை உபயோகப் படுத்துபவர் இந்த சுகந்த மூக்
குத்தூளை 2-தடவை உபயோகிப்பதனால் 15-தடவை உபயோகிப்
பதைவிட மேலாய் காணப்படும் மூன்றுபைசா சாதாரண புகை
யிலைத் தூளுடன் இந்த சுகந்த மூக்குத்தூளில் ஒரு சிட்டிக்கை
எடுத்து கலந்தால் எல்லாம் ஷ சுகந்த முண்டாகிவிடும். இதை
அநேக பிரபுக்கள் தங்கள் வீடுகளில் குடும்ப அவுஷதமாய் வைத்து
உபயோகித்து வருகிறார்கள் இந்தத் தூளானது சாதாரண தூளைப்
போல் 2-1-இரண்டொரு தினங்களில் தன் சுபாவக் குணமாகிய
வாசனை, காரம் முதலியவைகளை விட்டுவிடாது. எக்காலமும் அதன்
காரமும் வாசனையும் குணமும் தன்னைவிட் டகலாதபடி கார்த்துக்
கொண்டே இருக்கும். இதை உபயோகிப்பதில் யாதொரு கெடுதி
யும் சம்பவிக்காது. எந்த கம்பெனிகளிலாவது. மருந்து கடைகளி
லாவது, பொடிகடைகளிலாவது, வாங்குபவர்கள் பி. நா. என்பவ
ருடைய சுகந்த மூக்குத்தூளை கவனித்து வாங்கவேண்டும்

பி. நா. சுகந்த மூக்குத்தூளை எங்கள் கம்பெனியிலும். கீழ்க்
காணும் அட்ரசுடைய இடங்களிலும் வி-பி-மூலமாகவும் நேரிலும்
பெற்றுக்கொள்ளலாம்.

கிரயம் புட்டி 1-க்கு 0 4 0 டஜன் 1-க்கு விலை ரூ. 2 8 0
வி. பி. சார்ஜ் புட்டி 1-க்கு 0 3 0 வி. பி. சார்ஜ்புட்டி 12-க்கு 0 8 0

ஒரேதடவையில் 12-டப்பி அதாவது ஒரு டெஜன் வாங்கு
பவர்களுக்கு விலை ரூபா 2 8 0

எமது விலாசம்.

பி. நா. சிதம்பரமுதலியார்.

பிரம்பூர் போஸ்டு மதராஸ்.

சோலைமலைமுருகமலையாண்டி-நல்ல
தோகைமலைவிராலிமலை சென்னிமலையாண்டி ௫௭
வாலையருள்பெற்றவடி வேலா-முனிவர்
மாதவர்க்கேயேற்ற நாளுமனுகூலா ௫௮
விடவரவுபடமும் விசைகெடவும்-படியே
வடவரைகள்கிடுகிடென கெஜமுமசைபடவும் ௫௯
கடல்சுவரகதிர்மதி கலங்க-தாவி
கனமேகமாகவரு மயில்மீதிலங்க ௬௰
மேலாகிண்கிணியாடு மெய்யா-வெற்றி
காலாயுதத்தையு மெடுத்தமுருகையா ௬௧
சாலோகசாமீப மென்னும்-சுவாமி
சாரூபசாயுச்சிய பதவியிலேமுன்னும் ௬௨
ஆகவேநின்றபர நாதா-என்னை
ஆதரித்தாளவா வேணுங்குருநாதா ௬௩
தாகமாயிருக்குதுனைக் காண-வந்த
சுவாமிவருவாயெனது கண்ணெதிரேதோணா ௬௪
அரகராவேலனே நமாவோம்-சுவாமி
ஆறுமுகமாய்வந்த வடிவேநமாவோம் ௬௫
அரகராமுருகா நமாவோம்-வாலை
யம்பிகைபராசத்தி மைந்தர்நமாவோம் ௬௬
அராகராகுகனே நமாவோம்-சுவாமி
அன்பருக்கன்பான பொருளேநமாவோம் ௬௭
அரகராதேவா நமாவோம்-சுவாமி
அகிலபுவனத்திலும் நிறைந்தாய்நமாவோம் ௬௮
மயிலேறுமையிலா நமாவோம்-பொதிகை
மலைமேவுந்தமிழ்முனிவன் குருவேநமாவோம் ௬௯
மயிலேறும்கந்தா நமாவோம்-வட்ட
வடவாலில்மேவுமால் மருகாநமாவோம் ௭௰
மயிலேறும்நாதா நமாவோம்-சுவாமி
மலைமேவும்பரமனுட குருவேநமாவோம் ௭௧
மயிலேறுகின்றாய் நமாவோம்-தங்க
வடிவானவேலனு வுகந்தாய்நமாவோம் ௭௨
திரிபுரபவாவா நமாவோம்-வாலை
சேயனேதிகழொளி பவாவாநமாவோம் ௭௩
பரிபுரபவாவா நமாவோம்-வள்ளி
பாகனேபவளொளி பவாவாநமாவோம் ௭௪

சரஹணபவாவா நமாவோம்-கந்த
சுவாமியேசயலொழி பவாவாநமாவோம் ௭௫
தருமதுரையேநீரு மென்னை-நல்ல
தருணமிதுகாணிந்த வேளையிலேயென்னை ௭௬
காவாவுனீரடிகள் தன்னை-நான
கண்டெனதுகலிதீர வந்துமென்முன்னே ௭௭
வாவென்றுசொல்லமன மிலையோ-உமக்கு
வள்ளிதெய்வானைவிடை தந்தனுப்பவிலையோ ௭௮
தஞ்சமென்றேனே யுனக்கு-எனது
சஞ்சலமெனுங்கலியைத் தீர்ப்பாயெனக்கு ௭௯
அஞ்சறிவுமானதா யகனே-சுவாமி
அகில ண்டகோடிபிரம் மாண்டநாயகனே ௮௰
உன்கிருபைதந்துமே கண்பாரும்-இந்த
உலகமுழுதாள்பவனே யெனக்லியைத்தீரும் ௮௧
அன்புபெரும்வானராஜன் பேரா-சுவாமி
அடியனுன்னடியிணையைக் காணநீராரா ௮௨
வாவாயெனறேவாநீ யென்றே-சுவாமி
வடிவேலாவாவெனத் தொழுதுநின்றே ௮௩
எவன்றேடினுந் தேடட்டும்-நமக்
கென்சொல்லிக் கவிபாடினும்பாடட்டும் ௮௪
நமக்கென்ன வெறிருக்கிறீரோ-சுவாமி
ஞாயமோநானுமுறை யிட்டதறியீரோ ௮௫
உமக்குமனமிரங்காத தேது-எங்க
ளுத்தமிதுரந்தரியின பாலாயிப்போது ௮௬
ஐயாநீகிருபைசெய்த தாலே-இந்த
அகிலாண்டகோடிபூ மண்டத்தின்மேலே ௮௭
மெய்யானசரிதையி லனேகர்-அதற்கு
மேலானகிரிகையி லிருப்பவரனேகர் ௮௮
தவயோகக்காரர்வெகு வெள்ளம்
தங்கியேயிருப்பவர்களோமகாவெள்ளம் ௮௯
அவர்களைப்போல்நான்பிறந்த திலையோ-சுவாமிக்
காளாகவெனக்குவிதி வயனெழுதவிலையோ ௯௰
அன்னையவளீன்றெடுத்த கெதியோ-யெனக்கு
ஆதிபிலமுன்னவர்கள் செய்துவந்தசதியோ ௯௧
என்னகுறையிருந்தாலுந் தீர்த்து-உந்தன்
இணையடிக்கியானாக வென்னையுமேசேர்த்து ௯௨

ஆளாக்கி யாள லாகாதோ-எந்த
னகந்தனிலே நீயிருந்து வாழலாகாதோ
பாழான மனக்குவியு திலேயோ-யென்ன
பாவமோ வதிலிருக்கும் பிசகுதெரியலையே க௪
வஞ்சகமில்லாமலே கண்பாரும்-முடிவில்
மறலியுட னுதவென்னை வருததாமல்காரும் க௫
அஞ்சுதலை யாருளுந் துரையே-உமக்கு
அஞ்சுதலை யாலவேத னிருந்ததுவுஞ் சிறியே க௬
ஆறுதலை கண்டண்டரய்யா-பின்பு
ஆறுதலை யாய்ப்பதிவை யாண்டாரேமெய்யா க௭
ஆறுபடை வீட்டுக் கதிகாரா-வந்த
அசுரருட னஞ்சாத போர்புரியும்வீரா க௮
சத்தியுமை பாலகனே சாமி-எந்தன
தாசனுக்குத் தாசனெனைக் காப்பதற்கேமி க௯
சுத்தபரி பூரணு வுனை-ஒதி
துதிகுமடி யார்க்கடிமை யாகவருளென்னை ௰
பொய்யாத வாழ்வருள வேலா-கதிரை
ஐயாவே யெனையாளுந் தேவாதிதேவா ௰௧
ஒய்யார மானமுரு கோனே-வந்த
உற்பவ மெனுக்குதியை செப்புவேனுனே ௰௨
உரமான வசாரிடரசலே-தேவ
ரோடிமுறை யிட்டாரே கைலைமலைமேலே ௰௩
அரனசுரர் மேல்க்கோப மாகி கைலை
பாளிவிழி தனிலேயொரு பொறிசிதறி யேகி ௰௪
சரஹணப் பொய்கையி லமர்ந்து-அதுவுஞ்
சந்திரோ தயம்போலே பாலனென வந்து ௰௫
உருவாகி மலர்மீதி லானூர்-எங்கள்
ஓமநமசி வாயவெனும் பரமனருள்மகனூர் ௰௬
அப்பவே சென்னியோ ராறுய்-மெத்த
வழகான செந்திரு புயங்க ளீராறுய் ௰௭
உற்பன மானமணி ரண்டு-விழிகள்
ஒளிவாகி வோராறு பெண்கள்பா லுண்டுறை ௰௮
அயனையுஞ் சிறையினில் விடுத்தான்-கந்த
னரனுக்கு வுபதேசஞ் சொல்லியேகொடுத்தான் ௰௯

சயமுகா சூரன்முதலோரை-கந்தன்
கைவேலி னாலவர்கள் கருவறுத்தாரே ௱௰
தங்கவடி வேலலங் காரன்-மாது
தையல் தெய்வானை மணமேவு சிங்காரன் ௱௰௧
தென்கதிரை மானக மிலங்கும்-சுவாமி
சிங்காரமா யுனது வருள்கிருபை பொங்கும் ௱௰௨
சித்தமு மகிழ்ந்துவரும் லோலன்-வள்ளி
தெய்வானைக்கிணையான சித்ரமயில் வேலன் ௱௰௩
சத்திவேலாயுதமு முடையான்-பூண்ட
தண்டைகள் கலீரெனவே வந்தருளும் நடையான் ௱௰௪
சடகமெனு மானதிங்களிலே-எங்கள்
கதிரேசன் திருவிழா பவனிவரு கையிலே ௱௰௫
கடல்போலே பேரிகை முழங்க-விருது
கட்டிய மிருபுறமு மருகேதயங்க ௱௰௬
செங்காவிப் பட்டாலே கோடி-கொடிகள்
ஜெண்டாவு மாலவட்டக் குடைகள் பலகோடி ௱௰௭
மங்காத சாமரைகள் கோடி-வீசி
வருவார்கள் நடனமிடு மடமாதர்கோடி ௱௰௮
சேர்க்கையாய் முரசுசங் கூத-நல்ல
செந்தீ வளர்ப்பவர்கள் நான்மறையோத ௱௰௯
பார்க்கவெகு மாமுனிவர் வரவே-கவிகள்
பாடியே வரகரா வென்றுபுகழ்பெறவே ௱௨௰
ஆணிப்பொன் மாலைக ளிலங்க-மொய்த்த
அழகானவாலாத்தி தீபமேதுலங்க ௱௨௰௧
மாணிக்கப் பேழையி லுகந்தார்-கந்தன்
மதயானை மேலேறி யேபவனிவந்தார் ௱௨௰௨
மதகரியோ வருகிறதைப்பாரும்-சுவாமி
மாணிக்கப் பேழையி லுகந்ததையும்பாரும் ௱௨௰௩
கதிர்காம திருவிழா நேத்தி-எங்கள்
கந்தனு முகந்ததிரு வாபரணஞ்சாத்தி ௱௨௰௪
கரியுலவு வனமூடு சென்று-செல்லக்
கதிர்காமம் போய்வந்து நீரறுப்பென்று ௱௨௰௫
சரியான பௌர்ணையை நாடி-கந்த
சாமிசங் கிதபரி வாரமுடன்கூடி ௱௨௰௬
வாரிபோல் பெருகிநீ ரோடி-வார
மாணிக்க கெங்கையிலே வந்துநீராடி ௱௨௰௭

கூரான வடிவேல் சுமந்து-எங்கள்
குமரேசன் வள்ளிதனை நாடியேயுகந்து ௱௨௮
புள்ளிமயில் வேலர்விரை வாக-சென்று
பூவைபெனுங் குறமாது கோவிலுக்குளேக ௱௨௯
வள்ளியம்மை சுவாமிதனைக் கண்டு-வாரு
மணவாள ரென்றடி பணிந்தன்பு கொண்டு ௱௩௰
சித்ரமணி மலரணையில் தாவி-நல்ல
செங்கமலக் கரத்தா லணைத்திலர்கள் மேவி ௱௩௧
கொத்துமுத்து நத்துவளை திருத்தி-யிவர்கள்
குளிர்ந்தகம கமெனமலர் வாசனைகள்பொருத்தி ௱௩௨
இங்கிர்த மனோகுண நீதா-யெனக்கு
யினிபசுக போகமத லீலாவினோதா ௱௩௩
எங்கள்குலம் விளங்கவந்த நேசா-சுவாமி
யெனக்கிரங்கி யிதுசமயம் வந்தவிசுவாசா ௱௩௪
அத்தைபெற்ற முத்தேயெங் கோனே-யென்ற
ஆரணங்கை யுபசரித்து தேனேயம்மானே ௱௩௫
முத்திரையிட் டிலங்குகொங்கை யாளே-வள்ளி
மோகனமே யென்றந்த வேலவர்கையாலே ௱௩௬
கலந்தணைந்த சுகந்தமண வாசன்-எங்கள்
கட்டழகி வள்ளிதனை பார்த்துமதபோஜன் ௱௩௭
சலதரத்தைப் பழித்தகுழ லாளே-இந்திர
தனுவோவென் றதிசயிக்கும் புருவநுதலாளே ௱௩௮
எந்தனுக் கிசைந்த மனையாளே-வள்ளி
இந்திரன்மகள் தெய்வானைக் குகந்தவனையாளே ௱௩௯
வந்துவெகு நேரமா குதடி-யெந்தன்
மாதுதெய் வானைபெனைத் தேடிடுவாள்நாடி ௱௪௰
போய்வாறேன் விடைதாடி யென்ன-வெள்ளி
பூவையவள் கேட்டெந்தன் சாமிநீர்சொன்ன ௱௪௧
வாய்ச்சம்பிர தாயம்வெகு வீச்சு-நான்
போய்வார மென்றுசொன்ன வகைதானென்னபேச்சு ௱௪௨
அங்கேபோய்செலுத்துமதி காரம்-யெந்த
னரண்மனையி லிருந்தாக்கால் நடக்காதோவீரம் ௱௪௩
இங்கேரண்டு நாளிருந்து போனால்-சுவாமி
என்னகுறை வாங்கிவிடுங் காணுமுமக்கதனால் ௱௪௪
என்மனையி லிருக்கையிலே யவளேன்-உம்மை
யேன்தேடவேண்டியது ௱௪௫

உண்மையெனக் கின்னதென்று தானே-சுவாமி
உரையுமென வேலவரும் வள்ளியென் மானே ௱௪௬
இங்கேவந்து நானிருப்பதாலே-யென்னை
யெண்ணையோ வென்றுதெய் வானையொருக்காலே ௱௪௭
மங்கையருந் தேடுவா ளின்று-யெனக்கு
வள்ளிநீ விடைதாடி போய்வாறேனென்று ௱௪௮
இவர்கூறவள் ளியின்னுனே-சுவாமி
யின்றிரவு மிங்கிருந்து போகலாம்நானே ௱௪௯
அவசர முமக்கென்னயிங்கே-சுவாமி
ஆனாலு நீர்போக சம்மதியே னிங்கே ௱௫௰
கூடாது உம்மைவிட மாட்டேன்-மூத்த
குடியாளுக்கஞ்சிநான் பயப்படவுமாட்டேன் ௱௫௧
தேடியிங்கே தெய்வானை வரட்டும்-யென்றும்
செப்புவதும் பொய்யினையும் வள்ளிகைநீட்டும் ௱௫௨
பார்த்தேதடி வள்ளி மானே-சற்றும்
பாராம லிம்மொழிக ளேன்சொல்லுவானே ௱௫௩
ஆத்திர முனக்கென்ன போடி-தெய்வ
யானைக்கி நிகராவ ரோபெண்கள்கோடி ௱௫௪
சொந்தமாய் கிருபை பாராட்டி-அந்த
தோகையரைப் பருவமதில் நான்மாலைசூட்டி ௱௫௫
வந்தபடி யாலவ ளுனக்கு-முந்தி
வந்தவளு மானதால் நானுமவளுக்கு ௱௫௬
அடக்கமா யிருப்பதுவே சிலாக்கியம்-வள்ளி
ஆனாலுமில்லறத்துக் கதுதானே யோக்கியம் ௱௫௭
மடக்கொடி தெய்வானையவ ளிங்கே-நானும்
வந்தவகை தெரியாது தேடுவாளங்கே ௱௫௮
போகவிடை தாவென வரட்ட-யெங்கள்
பூவையெனுங் குறமாதுக் கதிகோபமூட்ட ௱௫௯
மாகனக மேடையி லிலங்கும்-உமது
மனையாட்டி மூத்தகுடி யாளென விளங்கும் ௱௬௰
தெய்வானை சொந்தமாய் போச்சோ-நானுந்
திருட்டுத் தனமாய்வந்த கள்ளிபோலாச்சோ ௱௬௧
கைமாயஞ் செய்தோமே நாங்கள்-ஒருவர்
காணாதே மாலையிட்டு வந்தீரோவுங்கள் ௱௬௨
சாதியா னேசுவா ரோகாண்-நீருந்
தன்மனையை யென்மனைக்கி வருவாளேசுவாமி யென்காண்

ஆதியிலே யென்னையு நினைத்து-வந்த
தறியாளோ தெய்வானை யும்மையுமழைத்து ௱௬௪
கூட்டிவந்த நாரதரைக் கேளும்-வனத்தில்
குளத்தருகி லேயிருந்த காடிபுலிவாழும் ௱௬௫
காட்டினி லுமக்குதவி செய்தார்-வுங்களண்ணன்
கணபதியைக் கேட்டாலுஞ் சத்தியமாய்ச்சொல்வார் ௧௬௬
சிவதலங்கள் செயசபைமுன் னாலே-வைத்து
தெய்வானை யைத்தாலி கட்டினதினாலே ௱௬௭
அவள்மாத் திரஞ்சொந்தக் கிளியோ-சுவாமி
ஆனாலும் நான்கிழக்கு முகமிருக்கவில்லையோ ௱௬௮
வள்ளியிவை சொல்லவே திகைத்து-சென்னல்
வளமான தென்கதிரை வேலனும் நகைத்து ௱௬௯
கள்ளிபோல் வீணிலிரை யாதே-பொல்லாக்
கசடான குறவருட சாதியொளிபாதே ௱௭௰
ரெண்டுசமு சாரமா காது-யென்று
நீணிலத்திற் சொல்லுவது சரியானதோது ௱௭௧
வண்டர்குல மானேயுனை நாடி-வந்த
மணவாளனுக் கெதிர்கள் பேசலாமோடி ௱௭௨
நில்லுநான் போய்வாரே னென்று-சொன்ன
நினைவறிந்து வள்ளியவள் சீறியெதிர்நின்று ௱௭௩
வல்லப முமக்கென்ன காணும் - எனக்கு
வகைசொல்லி யப்பாலே நீர்போகவேணும் ௱௭௪
என்சமர்த்தைப் பாருமினி யென்றே - வள்ளி
இடைதனிலே சேலையை யிறுக்கியெதிர்கொண்டே ௱௭௫
அன்புறநெருக்குவது கண்டார் - வள்ளி
அப்பாலே நில்லென்று சொல்லுகிறேனென்றார் ௱௭௬
சொல்லுகிற சமாச்சார மென்ன - உமது
தொழிலான வெடுகிலு மறிந்துமினி யென்ன ௱௭௭
நல்லதினி மேற்கொண்டு பார்ப்போம் - உமது
ஞாயமதை தேவசபையிலே சொல்லிக்கேட்போம் ௱௭௮
தேவசபை யிலேசொல்லிப்பாரு - அதற்கு
தெரியுமடி தினைப்புனத்தில் நீயிருந்தசீரு ௱௭௯
ஒவியமே உன்னுறுதி கேட்க - வெழுதும்
உடன்பிடிக்கை முறியுண்டோ கொண்டாடிப்பார்க்க ௱௮௰
உடன்பிடிக்கை முறியெழுதி தாறேன் - வள்ளி
புனக்கேவல் செய்வதற்கு உன்பிறகேவாறேன் ௱௮௧

கடக்கவென்னைத் தள்ளாதே மானே-யென்று
 கட்டிமுத்த மிட்டது கசப்பேறுவானேன் ௧௮௨
துணியேவனத்தி லிருபேருங்-கூடுஞ்
 சையோகவேளையிலே பார்தபெண்ணைநீரும் ௧௮௩
இனியசெந்தேனேகற்கண்டோ-உந்த
 னிதழென்றுசொன்னதுவு மில்லையோவுண்டோ ௧௮௪
முன்னிருக்கயினிப்பென்ன போச்சோ-யிப்போ
 மூந்தகுடியாளுனக்கு சர்க்கரைபோலாச்சோ ௧௮௫
எனைநீர்வசைசொலவேதேனோ-சுவாமி
 யென்குலத்தை நீரிகழ்ந்துபேசுவதுமேனோ ௧௮௬
தந்தையுங்கள்தேட்டையெடுத்தாரோ-யெங்கள்
 சாதியார்வந்துமிதந் தின்றுகெடுத்தாரோ ௧௮௭
எந்தனுற்குறைகளேதுண்டோ-சுவாமி
 இழுக்கெந்தசாதியிலு மில்லாமலுண்டோ ௧௮௮
மங்களகல்யாணமதில் கல்லால்-அந்த
 மணவறையி லென்தகப்பனிட்டகையல்லால் ௧௮௯
உங்களிடம்வந்தநாட்கொண்டோ-வெனக்கு
 ருத்திராட்சவடத்துக்கொரு நவமணியுமுண்டோ ௧௯௰
மாதிசைவயுரைக்கமுத் தையன்-வள்ளி
 மங்கைதனைப்பார்த்தேதுசொல்வார்மெய்யன் ௧௯௧
ஏதடிநீபேச்சதிகங் கொண்டாய்-வள்ளி
 யெனதுடையசாதியி லிழுக்கென்னகண்டாய் ௧௯௨
குபேரன்மகள்போல பேசாதே-நொப்பன்
 கொடுத்துவிட்டவரிசைகளை வெளியேசொல்லாதே ௧௯௩
சபையார்களென்னவதி யாரோ-யிந்த
 தாரணியிலுள்ளவர்களெவருமறியாரோ ௧௯௪
உடுத்திவந்ததுணிக்கிவேறுண்டோ-களிம்பு
 ஊறியபித்தளை யேலைக்கிவேறுண்டோ ௧௯௫
தொடுத்திருந்தகருகமணியோடே-யென்னை
 துடர்ந்துவரும்போதுனக் கேதுபட்டாடை ௧௯௬
வண்ணார்கள்வெளுக்காத சேலையுஞ்-சுத்த
 வாணியர்களெண்ணையிட் டறியாததலையும் ௧௯௭
புண்ணுக்குபோயிருக்குமேலும்-காட்டில்
 புண்டிசெடிமுள்ளிழுத்து சுரண்டிடவிட்டாலும் ௧௯௮
எப்போதுங்காய்கிழங்கைதின்று-நீயும்
 இருந்தகெதிதெரியாதோ வரும்போதென்பின்னும் ௧௯௯

ப்பவேகாணமைழத்துதந்து-நல்ல
வாபரணமானதையு மழகாயணிந்து ௨௱
சம்பவளமாளிகையமைத்து-உனக்கு
செங்கமலத்தாதிக்ளோ யேவல்கேயித்து ௨௱௧
ம்பிரான்செய்ததைமறந்து-வள்ளி
நாயகமேபேசுவது மென்னடிபிகழ்ந்து ௨௱௨
ாதேகீபதருதேவாடி-யெந்தன்
மனமுழுதமறியாமல் சொல்லாதேபோடி ௨௱௩
காதையேயிதுவென்னமூர்க்கம்-உங்கள்
கூறநீந்துசொல்லுகிறேன் குறவருடமார்க்கம் ௨௱௪
ாராயங்கள்ளுகள்குடித்து-குறவர்
சந்திக்குசந்தியே சண்டைகள்பிடித்து ௨௱௫
ூராயம்தெரியாமற்கத்தி-கண்ட
பூனைகளைபெரவாரமுசலென்றருத்தி ௨௱௬
ின்பதுவுமுண்டதிகமாக-குறவர்
சேரியிலேகீபழகி வந்தவைபோக ௨௱௭
செம்பவளவாயாளேயென்று-சுவாமி
செப்பவேவள்ளியவள் வெஞ்சினங்கொண்டு ௩௱௮
ின்னுணம்பேசுவதுசிரோ-சடலை
மீதிலெலும்பானதவை தின்றதுவுமாரோ ௨௱௯
ண்ணப்பனெச்சிதின் கலேயோ-சிவனுங்
கரிக்காகப்பாலகனைக் கொன்றதுவுமிலேயோ ௨௱௰
புத்தியுமக்கில்லாதேபோமோ-கெட்ட
புனக்குறவர்பெண்ணைநீர் சம்மதிக்கலாமோ ௨௰௧
யெத்திசையும்புகழ்பெற்றநாதா-வென்று
இவள்சொல்லுமவசைகண்டு கூறுவார்நாதா ௨௰௨
அ—ந்தேருவார்குடியிருந்தால்-குரவர்
அவர்தனக்கேசிலவுக் கில்லாதிருந்தால் ௨௰௩
கடன்வாங்குவார்சம்மதித்து-தாலி
கட்டியபெண்டுகளை யீடாகவைத்து ௨௰௪
குடுத்துவிட்டபணத்துக்கீடாக-வைத்த
குறத்திகளைப்பணங்கொடுத்த குறவன்வெகுவாக ௨௰௫
அடுத்தவனையனுதினமுங்கூடி-யிவர்கள்
அஞ்சாறுபிள்ளைகளைப் பெற்றபின்தேடி ௨௰௬
பணங்கொடுத்திருப்புகிறபோது-பெற்ற
பாலரையுங்கூடவே கூட்டியவள்மாது ௨௰௭

குணமாகமுன்னிவைத்த-பணமுப
　　குறவனுடன்போனதுங்கள் சாதியிலேமெத்த ௨௰௮
இருபுதுமையிவ்வுலகிலுண்டோ-வள்ளி
　　யேந்திழையேயினைகிட செச்சைவேறுண்டோ ௨௰௯
சதிகொண்டமயில்வாகனத்தார்-இந்தக்
　　கதைசொல்லவேவள்ளி யவளெதிருரைத்தாள் ௨௨௰
குறத்தியென்றெனக்குவசைபுரியஞ்-சுவாமி
　　கும்பமுனியானுங்கள் சேதிநெஞ்சந்தெரியும் ௨௨௧
மறந்தீரோநீரிந்தநிலையோ-ஞொப்பனை
　　மலைவேடன்மகளைப்போய் மாலையிட்டதிலையோ ௨௨௨
சிக்கைநமகிழ்ந்தொருபெண்ணைத்தூக்கி-உங்கள்
　　சிவன்தலையில்வைத்தமே சுமந்துக்குச்சாட்சி ௨௨௩
நந்திகேசுபரர்சொல்லக்கேட்டேன்-சுவாமி
　　ஞாயனிசமில்லாமல் நான்சொல்லமாட்டேன் ௨௨௪
ஆட்டிக்காலதுதனை யெடுத்தார்-உங்க
　　ளப்பனென்றவனிமுழு தெங்கும்பழித்தார் ௨௨௫
கேட்டுப்பாருமதுதாய் ஐயோ-ஒற்றை
　　மாட்டுக்காரனைவைத் திருந்ததுவும்பொய்யோ ௨௨௬
கண்ணாயிரங்கொண்டநேத்தி-னெம்மான்
　　பெண்ணாசைகொண்டல்லோ வந்தவபகீர்த்தி ௨௨௭
பெண்ணொருவர்கொடுக்காத தெதினால்-நொண்ணன்
　　பெருவயதுகொண்டுவழுக் கரையிலிருந்ததினால் ௨௨௮
அண்ணனுமேமத்தளங்கொட்ட-சொந்த
　　அருமைமருமகனின்று கைத்தாளந்தட்ட ௨௨௯
விண்ணவர்கள்கூடியேநகைக்க-வந்த
　　வேதியரும்மாதவரும் கண்டுபிர்மிக்க ௨௩௰
தேவடியாள்போலுமதுவன்னை-கூடுந்
　　தேவசபையிலேனின்று ஆடலையோமுன்னை ௨௩௧
பாவலருக்கருள்புரியுஞ்சீலா-யிதையும்
　　பார்த்தவர்கள்சிறியாரோ தங்கவடிவேலா ௨௩௨
பத்மாசூரனுக்குமிகப்பயந்து-உங்கள்
　　பரமசிவனோடலையோ காட்டுவழிநுழைந்து ௨௩௩
கைப்பொருளுமில்லாமல்தேகி-யென்று
　　கைப்பிச்சைவாங்கலையோ பரமசிவயோகி ௨௩௪
கும்பமுனிக்கருள்புரிந்தோரே-யென்று
　　கூவியேவள்ளிசொல்லு மொழிகளறிந்தாரே ௨௩௫

தென்பான பெண்மோக வள்ளி - யிந்த
சீமையிலே திருடிவருங் குறவர்குலக்கன்னி ௨௩௬
குடிகொண்டவனக்குறவச்சாதி - வகையை
கூறித்து சொல்லுகிறேன் கேளுமவர்சேதி ௨௩௭
சதிர்பெருகுந் திருவிழாக் கடையில் - ஜனங்கள்
சந்தடிக ளாகவே சயனிக்குமிடையில் ௨௩௮
கூசாமல் கூடவே படுத்து - தூக்கம்
குலையாமல் பணிதிகளைக் கழற்றியேயெடுத்து ௨௩௯
பேசாம லோடுவது கண்டு - குறத்தி
பெரியதனக் கார்களுமேபிடித்துக்கொண்டு ௨௪௰
வயிலே தலைமயிரைக் கட்டி - குரத்தி
மார்பிலே போடுவார் சொல்லென்றுகிட்டி ௨௪௧
செம்பாணி கொண்டுமே யிருத்தி - அவர்கள்
சேலையை யுரிந்தம்மண மாகவேநிறுத்தி ௨௪௨
அடிதண்ட மாகவே யடிப்பார் - குறவர்
அப்பவு மெடுக்கவில்லை யென்றுமேதடிப்பார் ௨௪௩
தடியடிக்கி யசையாத சாதி - குறவர்
சங்கைகெட்டு நிற்பார்கள் தெரியுமவர் சேதி ௨௪௪
என்றிவ ருரைக்கவுமே மாது - சுவாமிக்
கெதிராக நின்றேது சொல்வாளப்போது ௨௪௫
தொண்டர்தொழு குன்றமயிலேறுஞ் - சுவாமி
சொல்லுவேனுங்கள் குலவளமைகளைப்பாரும் ௨௪௬
அடையாளஞ்சொல்லுகிறேன் கேளும - நல்ல
ஆவினங்கள் கூடிவரு மாய்ப்பாடிவாழும் ௨௪௭
இடையருட வளவிலென் னாளும் - உறியி
லிருந்தவெண்ணை திருடினதை யாரென்றுகேளும் ௨௪௮
அன்றுடன் சோதையறிந்து - வந்து
ஆவினங்கள் கட்டுகிற கயறுல்வரிந்து ௨௪௯
ஒன்றாக மாதரொரு பங்கன் - கூடி
உரலோடே கட்டினதைச் சொன்னாலும்வெட்கம் ௨௫௰
கட்டுண்டதும் ரோஷ மில்லையோ - பெண்கள்
கட்டிய சேலைகளைக் களவாண்டதில்லையோ ௨௫௧
வெட்டிய சமர்க்களத்தி லேரும் - கிருஷ்ணன்
விஜையனுட குதிரைகளை மேய்க்கலையோபாரும் ௨௫௨
ஊத்துகிற கஞ்சிகளை யேத்தார் - கிருஷ்ணன்
ஊர்க்காலி மாட்டையெல்லாங் கூட்டியங்கேமேய்த்தார் ௨௫௩

கூத்ததிக முண்டின்னம் ரெம்ப - சொல்லக்
 கூசுதே பெண்மனமு மென்றிவளியம்ப ௨௫௪
கேட்டவடி வேலவர்கை நீட்டி - வள்ளி
 கேளடியுங்களுட வீடுமெங்கேகாட்டில் ௨௫௫
நீட்டியிரு கால்களை நிறுத்தி - அதனில்
 நெட்டுமுட் டாகவளை கட்டியேபொருத்தி ௨௫௬
நத்திய கயற்றால் வரிச்சு - மழைக்கு
 கரையாமல் மூங்கிலிலை யால்மேய்ந்தருச்சு ௨௫௭
சத்திவைத்த சுவரெல்லா மோட்டை - பசந்து
 தூங்கவும் விடாதங்கே முணுமுணுத்தமூட்டை ௨௫௮
ஆடேறி மேயுமதில் தொல்லை - வீட்டில்
 அஞ்சுபேர் தனக்கதிக மிருக்கவிடமில்லை ௨௫௯
மூடாத வாசல்களைக் கண்டு - பார்த்து
 மூடிநுழை சரவொரு முகட்டொழுக்குமுண்டு ௨௬௰
தேடாத பொருள்இலவு காணும் - வைத்த
 தீபமுந் தெரியாது தோணாமல் தோணும் ௨௬௧
கூடாது குறவீட்டை நம்ப - சற்றே
 குந்தவைக்க முடியாது நசநசப்புரெம்ப ௨௬௨
குறம்பாடிக் கஞ்சிகளை வாங்கும் - உங்கள்
 குறவருட பக்கியெல்லாங் கூரையிலேதூங்கும் ௨௬௩
வரம்பேது மில்லையென் றுனும் - யென்று
 வடிவேலர் சொல்லவே வள்ளிமின்றுனும் ௨௬௪
தமக்கென்ற சிறுகுடிசை கட்டி - குறவர்
 தானிருப் பதுவேவசை யில்லாதகெட்டி ௨௬௫
உமக்கொரு தலத்தினிலும் நாடி - சுவாமி
 ஒண்டயிட மில்லாமல் மலைக்குமலையோடி ௨௬௬
கையிலரைக் காசுமே யில்லாமல் - வீடு
 கட்டியே குடியிருக்க வகையுமறியாமல் ௨௬௭
வெய்யிலிலும் வேனிலிலுங் காய்ந்து - சுவாமி
 மெத்தவரு ஷித்தமழை பனியால்கனிந்து ௨௬௮
இருப்பதுவைக் கண்டுமனம் வாடி - உமக்கு
 யிவ்வுலகி லுள்ளவர்க ளெல்லோருங்கூடி ௨௬௯
சிறக்கவே கோவில்க ளமைத்து - உமக்கு
 செம்பொன்மணி யாபரணம் விருதுள்சமைத்து ௨௭௰
வடிவேல வாவென்று யெண்ணி - உமக்கு
 வரிசையிட்டு வைத்தார்கள் பிரதிஷ்டை பண்ணி ௨௭௧

அடியவர்கள் புண்ணியமீ தையா-நீரும்
அழகான கோவில்களி லிருக்கிறது மெய்யா ௨௭௨

தேருமத கரிபரியு மிரவல்-உமக்கு
ஜெயமேள பேரிகையுங் கோவிக்களுமிரவல் ௨௭௩

ஏறுமயில் வாகனமு மிரவல்-உமக்கு
பிட்டகவ ரத்னமணி யாபரணமிரவல் ௨௭௪

இத்தனையு முமக்கிரவல் தானே-குறவர்
இருப்பிடத்தைப் பழிக்கிறீ ரெண்ணுமல் வீணே ௨௭௫

வெற்றிவே லதுதானே சொந்தம்-உமக்கு
வேறேயொரு ஆஸ்திகளின் மேலென்னதொந்தம் ௨௭௬

பச்சமுனி மறைபொருள்க ளாலும்-உங்கள்
வங்கிஷ வருப்புகளைச் சொன்னும்கேளும் ௨௭௭

மச்சானே மறைவோதும் வேதன்-உமக்கு
வாய்த்ததொரு மாமனே அனவனந்ததாதன் ௨௭௮

ஆத்தாளோ பாளுருப் பறச்சி- அவளுக்
கருமையுள்ள தமையனையும் வளர்த்தவளுமிடைச்சி ௨௭௯

தாத்தாவோ மீன்காரக் கரவன்-உமக்கு
தனகர்த்த ளவனும் நல்லகுலமறவன் ௨௮௰

அரனொன்றுமையீன்ற தப்பா-சங்க
மாண்டியல்லோ சாதியிலே சொல்வார்கள்மெய்யா ௨௮௧

வரமுறைகளில்லாத நாட்டம்-உங்கள்
வங்கிஷங்கள்தெரியாதோ பலசாதிக்கூட்டம் ௨௮௨

இதற்குமுன்னே நானறிந்தாலும்-உமக்கு
இசைவேனோ சீர்குட்டிக் காணம்போட்டாலும் ௨௮௩

அதற்கென்ன செய்யலா மையா-நாங்க
ளானாலுங் குரச்சாதி யென்பதும் பொய்யா ௨௮௪

பண்டாரம் நானென்று கத்தி-யெந்தன்
பரனைநீரே வந்தீரே யதுவென்னபுத்தி ௨௮௫

கொண்டுகுலம் பேசுவது போச்சோ-சுவாமி
கொய்தினை மாவுக்கென்ன கெஞ்சினதும்போச்சோ ௨௮௬

பேருதெரி யாமலுரு மாறி-வந்து
பிசகுசெய்த மாதரிபி னாலேமைதமீறி ௨௮௭

பாரமக யானையும்வரா விட்டால்-உமது
பாசாங்குக் குள்ளாக மாட்டேனில்லாவிட்டால் ௨௮௮

வழுகினிந் தாடிகுற வஞ்சி - யென்று
வஜவேடன் போலவந்து பெணனெதிரேகெஞ்சி ௨௮௯

களையாறு தேனவந்து முட்டி-நீரும்
 காரியங்கொண்டபின் பேசுகிறீர்கெட்டி உகூ
வலியநான் வந்தேனோ தொட்டு நீரும்
 வஞ்சகம் பேசுகிறீ ரிதுவென்னசெட்டு உகூக
சலியாமல் நீறுருதி சொன்ன-மொழிகள்
 தவறுவரோ கலிகால மானுலுமென்ன உகூஉ
பொன்னடி தலங்கியவென் மாயி-பெற்ற
 புண்ணியனே யனுதினமு மகலாமல்சாமி உகூந
யென்னருகி லிருமென்று கேட்டால்-சுவாமி
 பெண்குலத்தை நீர்பழிக்க யுமக்குவிளையாட்டா உகூச
வையகத்துக் கேர்க்காது பெண்ணை-நீரும்
 வஞ்சகம் தாயிமாகா பேசுவதுதன்னை உகூரு
தெய்வானையோ சொல்லி விட்டாள்-எந்த
 சிறிசுகியுமக்கிவ்வளவு சூதுசொல்லி தொட்டாள் உகூசா
எப்படியோ நானறிய வில்லை-லோக
 மெங்குமீர்போகாத விடமொன்று மில்லை உகூஎ
இப்படியு மநதிட்ட தாரு-உமக்கு
 யேலாதோ சொல்லவந்த மங்கையர்கள்பேரு உகூஅ
வருந்திவிருந் தனித்தவனைச் சொல்லும்-அவளை
 மயிர்பிடித்துகொண்டாறேன் சற்றேயிங்கேசுநில்லும் உகூகூ
மருந்திடு மயக்கமில்லா விட்டால் - எனக்கு
 பதில்சொல்ல மாட்டீரோ நானெதுவுங்கேட்டால் ந௱
முருக்குவளை தாதிகளே வாடி - கமம
 முத்துலிங்க சுவாமிபேரீ கட்டிவாபோடி ந௱க
கருதுமருந் திடுபிசகு நேரனும் - எந்தன்
 கணவனெனுவ கந்தருககு கைபார்க்கவேணும் ந௱உ
மின்னாரே யென்றிவளுஞ் சொல்ல - யெங்கள்
 வேலசிது புதுமையெனக் கேட்டவருமென்ன ந௱ந
பெண்னடிவின் யோசனைகள் கொண்டாய் - நானும்
 யெவள்வீட்டி லேயிருந் தண்ணதைநீகண்டால ந௱ச
என்னுடைய சொல்வருதி மீறி - நீயும்
 எதிர்பேசி னதினாலே யுன்னைநான்சீறி ந௱ரு
சொன்னவசை யல்லாது சண்ணே - சும்மா
 தோகையே நானுமுன்னை பேசுவனோபெண்ணே ந௱சா
மயங்காதே நீவள்ளி மாதே - உந்தன்
 மனமறிய நான்சொன்ன தல்லாதிப்போதே ந௱எ

ஜெயமாக நான்போயி வருவேன் - வள்ளி
　　தினமுமுனைப் பிரியாமல் தெரிசனமுந்தருவேன் ௩௱௮
உந்தனைவிட் டகல்வேனோ மானே - யென்று
　　யுபசாரஞ் செய்தங்கி ருக்கையிலேதானே ௩௱௯
கந்தனையுங் கோவிலுக்குள் தேடி - அங்கே
　　காணாமல்த் தெய்வானை யம்மைமனம்வாடி ௩௱௰
மங்கையரே சந்த்ரப்பிர காசன் - அந்த
　　மாணிக்க கெங்கைக்கு போனமுருகேசன் ௩௱௰௧
யெங்கேயென வேலவரைத்தேடி-நீங்க
　　ளிதுநிமிஷம் வரவேணு மென்றிடவேபோடி ௩௱௰௨
தாதியர்க ளெல்லோருஞ் சென்று-யெங்கள்
　　சண்முகவே லாயுதனைத் தேடினாரென்று ௩௱௰௩
ஆதிசிவ மாணிக்க கெங்கை-தீர்த்த
　　மாடவந்த வேலவரைக் கண்டீர்களோ யிங்கே ௩௱௰௪
பாதிபிறை நுதலழகி யானே-அவள்தன்
　　பர்த்தாவைக் காணோமென்று தேடிவதினாலே ௩௱௰௫
கதித்தபுகழ் கொண்ட முனிவோரே-யெங்கள்
　　கந்தனையுங் கண்டதுண்டோ சொல்லுவீர்நீரே ௩௱௰௬
காணிக்கை கொண்டு வந்தோரே-எங்கள்
　　கட்டழகி தெய்வானை மணவாளனாரே ௩௱௰௭
மாணிக்க கெங்கைநீ ராட-யிங்கு
　　வந்தவரைக் காணீர்களோ யினியெங்கேதேட ௩௱௰௮
பாங்கியர்கள் நதியெங்குந் தேட-கோவில்
　　பணிவிடைக் காரர்தெரு வீதிவழிநாட ௩௱௰௯
எங்கியவர் தேடுவது கண்டு-சுவாமி
　　யெங்கோனுஞ் சிந்தையி லறந்தன்புகொண்டு ௩௱௨௰
நினைவில்மறக்கா தெய்வானை-யிந்த
　　நிமிஷமேகூட்டிவா வென்றேவுஞ்சேனை ௩௱௨௰௧
எனையழைக்க வேணுமென்றுதேடி-வாறார்
　　எதிழையே நான்போயி வாவும்விடைதாடி ௩௱௨௰௨
தாடியென்று சொல்லவே இசைந்து-வள்ளி
　　தையலருஞ் சுவாமிதனைப் பார்த்துமேகண்சுத்து ௩௱௨௰௩
தேடிவந்தபேர்களைநா னடிப்பேன்-அந்த
　　தெய்வானை வந்தாலுமே சண்டைபிடிப்பேன் ௩௱௨௰௪
என்னுடைய கணவனையுந் தேட-அவளுக்
　　கென்னவதி காரமிண்ட கேழ்க்குதீரோடா ௩௱௨௰௫

மன்னவா பிறகென்ன வென்றே-சொன்ன
வள்ளிதனை யுபசாரஞ் செய்தருகில் நின்றே ௩௨

யெனக்குரிய மானேநீ கோபம்-இப்போ
வென்பேரில் வைக்காதே வீண்மனஸ்தாபம் ௩௨

உனக்கு நான்பிசகு செய்வேனோ-பெண்ணே
யோசனைகள் செய்யாதே நான்மறப்பேனோ ௩௨

போய்வாறேன் வள்ளி தயவாக-யெனக்கு
புகழ்ந்துவிடைதாடிதெய் வானையிடமேக ௩௨

வாய்திறந்து சொல்லுமனை மகிழ்ந்து-யென்று
வடிவேலர் கேழக்கவே வள்ளியு முகந்து ௩௩

மறைபுகழு மின்றவடிவேலா-சுவாமி
மனவருத்தமில்லாமல் போய்வாருஞ்சிலா ௩௩

இறையவருக் குகந்தமகனாரே-யென்று
பின்சொல்ல வேலர்வழி கூடிநடந்தாரே ௩௩

சித்திர வடிவேலர் நடந்தார்-இங்கே
தேடிவந்த தாதியர்கள் கண்டடி பணிந்தார் ௩௩

வெற்றிமயிலோ னவைபுகொண்டு-கோயில்
மேவியதெய்வானையைக் கண்டெதிரே சென்று ௩௩

மங்கையரே யுனைத்தேடி வானேன்-நம்ம
வள்ளியம்மை தன்னுடைய கோவிலுக்குப் போனேன் ௩௩

செங்கமல மாதேயென் கண்ணே-யிப்போ
தேடினது மென்னவகை சொல்லாயோபெண்ணே ௩௩

தெய்வானை யென்றூர் துணிந்து-அந்த
தேவிசெவ் வேள்பாத மலரடிபணிந்து ௩௩

வைபோக மானவடி வேலே-உடைய
மணவா உமக்குயித மிதுதானோவேலை ௩௩

இளையாளமே லிருக்கிற பாசமு-சுவாமி
யென்பேரிலேனில்லை யுமக்குவிசுவாசம் ௩௩

அழையாதவிருந்தோ நீர்காணும்-வள்ளி
யவண்மனைக்கி நிதம்வலியப் போகவோவேணும் ௩௪

முழுக்கவே யும்மாலே பேச்சே-சாதி
முறைதவறிக் குறவருட சம்மந்த மாச்சே ௩௪

இழுக்கான சாதியிலேயி-மாலை
யிட்டாலு மேன்மையது தருவாரோ யோகி ௩௪

அடிக்கடிநீ ரவள்மனைக்குப் போனால்-மெத்த
வலக்களிப்பாகவே சொல்லுவாளானால ௩௪

குடிதனி லுயர்ந்தவரு மில்லை-வள்ளி
குறவர்குல மானதால் சொன்னேனென்சொல்லை ௩௪௪

நிசமென்று நீரெண்ணுவீரோ-உமக்கு
நேர்ந்தாலும் வள்ளியுட மோகமதவீரோ ௩௪௫

ஆசையாம லானந்தமீதி-வள்ளி
ஆசைகொண்டு பேசுகிறீர் நானுமக்குப்பாதி ௩௪௬

யாதொரு னெடுத்ததென்ன கோட்டை-புவியில்
அறியாரோ நீரெனக்கு தேடிவருந்தேட்டை ௩௪௭

தேசியென வண்டிபோ லானீர்-வள்ளி
தேசியவள் தினைமாவை தின்கவேபோனீர் ௩௪௮

திரிபுவனை யருள்பெற்ற பாலா-உமது
சித்தமது வெப்படியோ கதிரைவடிவேலா ௩௪௯

அரிமருகரே யென்றுரைக்க-யெங்க
ளாறுமுகன் சொல்லுவார் தெய்வானைமெய்க்க ௩௫௰

மானேநான் உன்வருதி பெற்றேன்-பின்பு
வள்ளிதனை மாலையிட்டு கூட்டிவந்து வைத்தேன் ௩௫௧

தேனேயென் மேற்பிழைமுக மில்லை-உனக்கு
தெரியாதோ வீணில் பேசுவதுதொல்லை ௩௫௨

கோவிலுக்கு நீபோடி யென்று-யெங்கள்
குமரேசன்சிம்மா சனத்திலேயென்று ௩௫௩

சேனையொரு கையினி லிருக்க-யெங்கள்
சித்திரவடி வேலவரு மேகொலுவிருக்க ௩௫௪

சூடதீவாரா தனைக்கி-வந்து
சூழ்ந்தார்கள் கோடானு கோடியன்றைக்கி ௩௫௫

அடியவர் பணிந்துதுதி பாட-கதிரை
ஆறுமுகன் மீதினில் கவிமாலைசூட ௩௫௬

சிம்மா சனத்தி லிருக்க-யெங்குஞ்
ஜெயஜெயென வந்தவர்கள் சூழவேபெருக்க ௩௫௭

அம்மாபரஞ்சோதி பாலன்-நல்ல
அன்புடன் னருளுவா ராறுமுகவேலன் ௩௫௮

அன்பவினை யணுகாமல்த் தானே-நீங்கள்
சுகமாக வாழ்வீரென் றெல்லவர்க்குந்தானே ௩௫௯

தென்கதிரை வேலருளாக-வந்த
தேவர்களு மனிதர்களுந் தங்கள்பதிக்கேக ௩௬௰

சித்தர்களும் வந்து நிதம்பணிய-இந்த
செகதமிழ் தனக்குதவி செய்சுப்பிரமணிய ௫௬

கர்த்தனரு ளாலேகுறை வில்லை-ஆறுங்
கதிர்காம மென்றாலும் வறுமைகளுமில்லை ௫௬

தேவர்களு முனிவர்களும் வாழி-யெங்கள்
திருமாலு மயனரனு முமையாளும்வாழி ௫௬

நாவலரும் பாவலரும் வாழி-வள்ளி
நாயகன் மேற்கவியி தென்றனும்வாழி ௫௬

புள்ளிமயில் வடிவேலும் வாழி-இந்தப்
புவியெங்கும் நகரத்தார் புகழ்பெறவேவாழி ௫௬

வள்ளிதெய் வானையுடன் மேவி-யோக
வாழ்வுபெறுங் கதிரேச னென்றனும்வாழி. ௫௬

கதிரேசன் ஆனந்தக்களிப்பு

முற்றிற்று.



உ

சிவமயம்.

கதிர்காமத்துயேசல்.

சீர்வளருங்கதிரை நாதன்மேல்சிந்துபாட
சித்திவிநாயகனை யெண்ணியே-வாலை
சத்திசிவனைத்துதி பண்ணியே ௧

சத்திசிவனருளும் வெற்றிவேலவர்மலர்த்
தாளிணை தன்னைமறவேனே-கந்த
வேளெனுமெங்கள்முருகோனே ௨

கோனெனுமிந்திரனுந் தேவருந்துதிசெய்யுங்
கும்பன் குருவைப்பணிந் தேற்ற-வெகு
யின்பமுடனேகதை வாழ்த்த ௩

யின்பமுடனேவருமன்புள்ளதோழியரே
யெங்குலதேவனருள் சேரும்-இந்த
தென்கதிர்காமமதைப் பாரும் ௪

தென்கதிர்காமமென்றால் யெங்கும்பிரகாசமாக
சேவல்க்கொடி யிலங்கு தோகையா-இந்த
மாவணமாநகரில்த் தானையா ௫

மாவளமானயிந்த யாககர்தனனில்வள்ளி
மங்கைக்கிசைந்தமுருகோன் பெண்ணே-வேல
ரிங்கேயிருக்கிறார்தான் கண்ணே

இங்கேயிருக்கிறவர் செங்கைவேலவ ரென்றால்
யிந்தமதகரிபோலப் பாரையா-மேவி
யந்தாபவனிவாற தாரையா

அந்தாபவனிவரும் கந்தன் பன்னிருகையன்
ஆனைமேலேறிவரு வோரடி-தேவர்
சேனைசேனாதிபதி தானடி

சேனாதிபதியிவ ரானைமேலேறிக்கொண்டு
தெருவில்பவனிவரும் வேலனை-வெகு
அருமையாயீன்றவளார் வேலனை

அருமையாயீன்றவளுந் திருமாலுடன்பிறந்த
ஆத்தாளை யெங்கள்பரமேஸ்வரி-கைலை
காத்தாளேமங்கைமங்களேஸ்வரி

காத்தாளேசெங்கைவேல னுக்தாளிவளென்றீர
கயிலாசநாதர்க்கிவ ளாரு-யெனக்
கோயிலாகசொல்லுமறுசீறு

ஓயிலாகயிஸ்பரியுங் கயிலாசநாதருக்கு
உத்தமிசொந்தமனை யாளடி-வாலை
சத்திசிவனென்பார்கள் கேளடி

சத்திசிவனையவர் பெற்றிடும்ரதிமதன்
தான்வந்தெதிர்த்ததென்ன சீரையா-சிவன்
ஏனவர்தன்னையெரித் தாரையா

ஏனெரித்தாரென்றுயே மானேயுடையவர்மேல்
யேதுக்குப்பாணமதனே னெய்தான்-சிவன
வாதுக்கனலாகவேதான செய்தான்

வாதுக்கெதிர்த்துவந்த போதுவிஜயன்வில்லை
வாங்கிசிவனையடித்தே வைதான்-சிவன்
தாங்கியருளவர்க்குயேன செய்தான்

தாங்கினதுதவத்தா லோங்கியபார்த்தனெனுந்
தானேபொறுத்தாருள் சிந்தையார்-இந்த
ஆனைமேல்வாறகந்தன் தந்தையார்

ஆனைமுகமும்பெரும் பானைவயறிலங்க
அந்தாயிருக்கிறார் பாரையா-ஒரு
தந்தமிலங்கியவ ராரையா

தந்தமதுதலந்த லைக்குகரமிலங்க
தனியேயிருக்கிறவர் தான்பெண்ணே-வள்ளிக்
கனியகுமரன்தமையோன்கண்ணே ௰அ

இனியகுமரனையும் கனிவாய்வளர்த்தெடுத்த
யீசனுக்குயிந்தப்பிள்ளை யேனோ-தந்தி
வேஷமெடுக்கவிதி தானோ ௰௯

வேஷமெடுத்துகண் டேசியவள்ளியஞ்சி
வேலெனுங்கந்தனைக்கொண் டாடினால்-ஒரு
தாழ்வன்றிமாலையிடக் கூடினாள் உ௰

தாழ்வன்றியேபுவியில் வாழ்வுமிருந்தகந்தன்
சங்கையில்லாமல்கெஞ்சி நேரே-குற
மங்கையைக்கூடிக் கொஞ்சினாரே உக

மங்கைகுறவருட தங்கையல்லடிபெண்ணே
வந்தபகவன்முனி வேண்டி-ஆதி
சொந்தமாய்ப்பெற்ற வள்ளிதாண்டி உஉ

சொந்தமாய்வேலனுக்கு யிந்தவள்ளிக்குமுன்னே
சூட்டவில்லையோ மணமாலை-திருப்
பூட்டவில்லையோபுவி மேலே உ௩

பூட்டவேதெய்வானையைக் கேட்டுமுன்னாலேயிலே
பூமனுஞ்செய்தாரடிவேலன்-ஆழி
வாமனன்தங்கையருள் பாலன் உ௪

வாமனனுமஞ்செய்து நேமகமாய்மாலையிட்டு
வந்தவர்வட்டக்குடை யின்ன-யிந்த
தந்திமேலேறிவாற தென்ன உ௫

தந்தியிலேறிவார திந்தத்திருவிழாவின்
சங்கையதுதாண்டி கண்ணே-சுவாமிக்
கிங்கேவளமையிது பெண்ணே உ௬

இங்கேவளமையென்று லெங்கும்பகலைப்போலே
யிருபுறமுஞ்சணங்க ளேந்தியே-கொண்டு
வருகிறதீபமென்ன காந்தியே உ௭

காந்தியுடனேகையி லேந்திக்கொண்டாடிச்சிலர்
சர்ப்பூரதீபமதைத் தூண்டி-வாறார்
சுப்பிரமணியனுக்கே தாண்டி உ௮

தாண்டியுபசரித்து வேண்டியதர்மஞ்செய்ய
சத்திரங்கட்டிவைத்த தாரையா-வேலை
சித்திரமானதிதைப் பாரையா உ௯

இத்திரமானவன்ன சத்திரங்கட்டிவைத்ததோர்
செந்தமிழ்சேர்நகரத் தாரடி-வைத்த
நந்தவனத்தைச்சுற்றிப் பாரடி

நந்தவனமும்வைத்து செந்தமடங்கட்டிய
நகரத்தாரென்றாலவ ராரு-அவர்
புகழ்பெற்றிருப்பதெந்த ஊரு

ஊரெனும்பாண்டிதேசத் தாரெனும்பேர்புகழ்ந்து
ஓங்கியதொண்ணூற்றாறா ராரடி-வெகு
பாங்குள்ளநாட்டுக்கோட்டை யாரடி

நாட்டுக்கோட்டையாரென்றால் வட்டமில்லாதலங்கை
நாட்டுக்குவந்தவகை யேதையா-புகழ்
நீட்டும்நகரத்தார்கள் தானையா

தானையாவென்றுசொன்ன மானேகொழும்பினிலே
சந்தோஷமாகவேயா பாரமுஞ்-செய்ய
வந்தவர்களிவரென் னேரமும்

என்னேரமுங்கொழும்பில் சொர்ணயாபாரஞ்செய்தால்
மிந்தக்கதிர்காமத்தை நாடியே-யிவர்
வந்ததென்னபுகழ்கள் பாடியே

பாடியேவேலெடுத்து ஆடிக்கொண்டாடி மதப்
பௌர்ணைக்கேவரு வாரடி-யிங்கே
வருஷங்கள்தோறும்வெகு சீரடி

வருஷங்கள்தோறுமிங்கே வருவாரானாலுஞ்சொந்த
மானகர்க்கேகிளலப் போதுகாண-யிங்கே
தான்வேலெடுத்துவார தாருகாண

ஆருசாணென்றாய்புக ழேநம்புதுக்கணக்குக்
காகவந்தநகரத் தார்கள்-வெகு
சேகரமாகவரு வார்கள்

சேகரமானகன யோகரெனுமிவர்கள்
செல்வமிருந்தவரோ தோணும்-நல்ல
கல்விமிருந்தவரோ காணும்

கல்வித்திறமையுண்டு செல்வமகிமையுண்டு
கந்தனருளைப்பெற்ற பேருக்கே-வெகு
விந்தையாய்நாட்டுக்கோட்டை யாருக்கே

நாட்டுக்கோட்டையாருக்கு நீட்டும்புகழ்படைத்த
நகரத்தாரென்றிவரைத் தானையா-வெங்கும்
சகலபேர்களும்சொல்வ தேதையா

சகலியாபாரதர்மஞ் சகலதிருப்பணியும்
தவறாமல்ச்செய்துவர்ந்த தோதினல் - புவியி
லிவநகரத்தாரென் றோதினர் உ௪

இவர்களைப்போலனேகர் யெவளவோதர்மஞ்செய்தார்
யெளயோகாணுமந்த் நாளில்லை - அப்போ
தாளவர்க்கந்தயே ரேனில்லை ௪௩

பேர்புகழ்சரிதைகிரிகை நேருங்குகனருளும்
பெற்றதினல்நகரத்தாரே - யெல்லா
யெத்தலத்திலுமுரைத் தாரே ௪௪

எத்தலத்திலும்புகழ் பெற்றமதுரைச்சொக்கர்
யிருக்கும்கோயிலையெல்லாக் தாணையா - பொன்னல்
சிறக்சவலங்கரித்த தாரையா ௪௫

ஆறென்றாய்பெண்ணேயெங்கும் பேறானதென்மதுரை
ஆலயத்தைப்புதிப்பித்த தாரடி - வடி
வேலனருள்நகரத் தாரடி ௪௬

வேலனைப்பெற்ற சத்தி வாலைசிவகாமித்தாய்
வேவுஞ்சிதம்பர நடேசனார் - சபை
பாவும்புதிப்பிக்கிற தாரையா ௪௭

புதிப்பிக்கவேணுமென்று மதிப்பித்துகந்துசெய்தார்
குவியில்ப்புகழ்நகரத் தாரடி - மூகில்கள்
குவியும்தன்மைபோல்சொடை யாரடி ௪௮

கொடையார்கள்தர்மம்செய்ய சடையாரோவாணிபத்தில்
கூடும்முயர்ச்சியுள்ள வாழ்வுளோர் - புகழ்
நாடும்வேதாகமத்தின் கேள்வியோர் ௪௯

நாடுமயோத்திகாசி ராமேஸ்வரம்வரைக்குப்
நகரத்தார்தர்மம்நிலை நாட்டினர் - நித்தியம்
சுபஜெயமங்களத்தைச் சூட்டினர் ௫௰

சூட்டியவர்க்கருளைத் தீட்டிாவேலவர்மேல்ச்
சொன்னகவியெங்கும் பிரகாசம் - ஓசோ
மன்னவருமக்கெகந்த தேசம் ௫௧

தேசமென்பஞராமன் சேதுபந்தனஞ்செய்த
சீமான்திருப்புல்லாணி தானடி - தங்கம்
ராமசமியெனபது நானடி ௫௨

நாணடிக்கடிகந்த நாதன்தனைப்பணிய
நல்லதினங்களெப்ப காணும் - அதைச்
சொல்லநாயிக்கேவர வேணும் ௫௩

சொல்லக்கேள்சுக்கிரவாரம் சோமவாரங்கள்மாதம்
தோதானகார்த்திகைக்குத் தானடி - வந்தால்
பாதகங்களன்று போமடி

பாதகந்தன்னைப்பரி காசமேசெய்யுங்கந்தன்
பாதந்தனைப்பணிய லேனும் - நாங்கள்
காதல்கொண்டேவருவோம் காணும்

காணுந்தவமிருந்து கதிரைப்பதியுகந்த
கந்தன்செந்தூரில்வளர் யோகண்டி - நல்ல
தொந்தமிட்டாடுமயில் வாகண்டி

வாகன்செந்தூரானென்றால் வையாபுரிபழனி
மாமலைமேலிருப்ப தாரு - நல்ல
சாமிமலைகுகந்த தாரு

சாமியலைமுதலாய் பூமிதனிலுமுள்ள
தலங்களெல்லாமிவர் தாண்டி - மேவி
விளங்குங்கதிரைப்பதி யாண்டி

ஆண்டிக்கிவ்வுலகமெல்லாம் வேண்டியபதியென்றால்
அத்தலங்களிலேது காணும் - இவர்
சித்தம்வைத்திருப்பதெங் கோணும்

சித்தம்வைத்திருப்பது முத்தரொனுமடியார்
சிந்தையைவிட்டகல மாட்டார் - மாயன்
செந்திருவாழ்கதிரை நாட்டார்

நாட்டாரடியவர்மேல் நாட்டமாயிருந்திட்டால்
நாட்டுப்பதிகளில்ச்செல் வாரோ - நாமும்
கேட்டவரங்கள்தரு வாரோ

கேட்டவரந்தருவார் நாட்டுப்பதியில்செல்வார்
கேசவன்தன்மருக னூர்க்கே - யெண்ணி
வாசமாய்கம்பிடந் தோர்க்கே

வாசமுடனேகதி ரேசனைத்தொழுதிட
மாருமையாபுகழ லாலி - யினி
கூறும்ஜெயமங்கள வாழி

வாழிகதிரேசனும் வாழிவள்ளிதெய்வானை
வாழியடியவர்கள் வாழி - யெங்கள்
மேழிக்கொடிக்குலமும் வாழி

கதிர்காமத்துஏசல்
முற்றிற்று.

உ

சிவமயம்.

கதிர்காமக்கும்மி.

சீர்வளம்பெற்ற குயில்கூவும்நல்ல
தென்கதிர்காம மதில்மேவும்
ஆறுமுகன்கதி ரேசனுமேலெங்கள்
அண்டர்கொண்டாடிய வாசனுமேல். ௧

மங்களஞ்சேரும் குமிப்பாடவந்து
மாணிக்கப்பிள்ளையார் காப்பாட
சிங்கத்திலேறிய பூரணியேயெந்தன்
செந்தமிழ்க்கேயருள் நாரணியே. ௨

சுந்தரநீரணி ஆறுமுகன்மீதில்
சொல்லுந்தமிழுக்கு நாலுமுகன்
சிந்தைக்கிசைந்தவனை வாழ்த்திக்கவி
செப்பும் புலவர்களைப்போற்றி. ௩

சந்தோஷமாய்க்கும்மிப் பாட்டுரைக்கக்கந்தன்
தையல்தெய்வானையு மேசிறக்க
வந்துதவிசெய்ய வேணுமம்மாநானும்
வாழ்த்துங்கவிமாலை பூணுமம்மா. ௪

கந்தன்கதிர்காம வேலனைப்புவி
கார்க்குமலை நமுக சோலனை
யெந்தனுக்கேயனு கூலனைத்தொழு
தேத்திப்பணியுய்ய சீலனே. ௫

மங்கையரெல்லாரும் வாருங்கடியிந்த
மாணிக்கக்கெங்கைநீ ராடுங்கடி
சிங்காரமாய்ப்பணி பூட்டிக்கொண்டுமுகம்
சிறந்தகுங்குமம் தீட்டுங்கடி. ௬

கூந்தலுக்கேமலர் மாலைகட்டிநல்ல
கோலவர்ணப்பட்டுச் சேலைகட்டி
சேர்ந்திணையாகவே பாடுங்கடிகந்தன்
சேவடிபோற்றிக்கொண்டாடுங்கடி. ௭

ஐயமில்லாமலே நாடிவந்தயிந்த
ஆறுமுகன்பதி தேடிவந்த
செய்யிழைமார்களே வாருங்கடிகவிச்
சிற்சபைசொல்லுறேன் கேளுங்கடி.

ஓதியசெந்தமிழ்ப் பாடவேயிந்த
ஊர்வளஞ்சொல்லிக் கொண்டாடவே
யேதுபிழைகளிருந்தாலும்சுவாமி
யேழைக்கிரங்கியெனையாளும்.

ஆறுமுகனென்று பேருடையானெனை
யாளும்கதிர்காமத் தூருடையான்
சீருடையான்வடி வேலுடையான்வெகு
சித்தர்கள்போற்றியகாலுடையான்

சத்திக்குகந்த மகன்தானேயிவர்
தந்தையுமுக்கண் சிவன்தானே
யெத்திசையும்புகழ் மால்முருகன்றன்னை
யேத்திக்கொண்டாடலாம் வாருங்கடி.

வாசம்புகழ்கதிர் காமத்திலேமழை
மாரிபெய்யவுஞ்சந்தோஷத்திலே
ஆசைமிகுந்துழ வேத்தினர்சென்னல்
அள்ளியவலெங்கும் தூத்தினர்

சென்னல்களெல்லாம் விளைந்திருக்குமெங்கும்
சிங்களநாடு மகிழ்ந்திருக்கும்
கன்னல்தழைத்தெங்கும் மூத்தீனும்பூங்
காவுகளெல்லாம் வளர்ந்தோங்கும்.

மாவுங்கொய்யாவு மடர்ந்திருக்கும்புன்னை
மரம்பிலாவுந் தொடர்ந்திருக்கும்
கூவுங்குயில்மயில் கூட்டமும்வெகு
குஞ்சரங்களெங்கும் நாட்டமும்

கானகத்தில்மயில் ரொம்பவடிபுலி
கரடியான்மரைக் கும்பலடி
வானரங்கள்விளை யாடுவதுமெங்கும்
வண்டுகள்கீதங்கள் பாடுவதும்.

மாணிக்ககெங்கையா ரோடுவதும்நிதம்
மாதவர்வந்துநீ ராடுவதும்
காணிக்கைகொண்டு வருவாரேகதிர்
காமத்தைநோக்கி வெகுபேரே.

வீதியலங்கார மெத்தவடியிதில்
மேவுஞ்ஜனங்களும் சுத்தமடி
சோதிமயமான கோபுரமுங்கோவில்
சூழ்ந்ததிரும்தில் தாவரமும். ௰௭

குமரன்கோவி லிலங்குதுபாரிதில்
கொட்டியமேள முழங்குதுபார்
அமரர்கூடிய கூடமும்வள்ளி
யம்மைதெய்வாணைக்கி மாடமும். ௰௮

என்னசொல்வேன்கதிர் காமத்தின்கோவி
லிலங்கியவலங் காரத்தை
சன்னிதிகாவலும் சிங்களவர்கோவில்
ஸ்த்தானிகராவதும் சிங்களவர். ௰௯

நன்னகரெங்கினும் சிங்களவர்கோவில்
நாட்டியக்காரரும் சிங்களவர்
மன்னனரசக் குருத்தவர்கள்விட்ட
மாணிபங்கள்ரொம்பப் பெற்றவர்கள் ௨௰

புத்துமதத்தி லுகந்தவர்கள்கந்தன்
பூசையில்நித்த மிருந்தவர்கள்
நித்தமும்சிங்களவர் கூடுவதுமிவர்
நேர்ந்துபணிந்துகொண் டாடுவதும். ௨௧

தெய்வாணைக்கேத்த மலர்கள்கொய்வார்
தேசசன்னியாசிகள் பூசைசெய்வார்
வைபோகமிப்படி யுள்ளதடிஸ்தல
மகிமையைச்சொல்ல நல்லதடி. ௨௨

வெண்டிசைதோறும் புகழ்வாசன்கொழும்
பெங்கும்சிறந்த கதிரேசன்
கண்டியில்மேவிய தீரனடிகந்தன்
காலாயுதக்கொடி வீரனடி. ௨௩

செங்கைவேல்வில்லையும் பெற்றவண்டிஅந்த
தென்னிலங்காபுரி மெய்த்தவண்டி
சிங்காரமாகிய வேலனடிஅவர்
சிறப்பைநான்சொல்லக் கேளுங்கடி. ௨௪

சிறப்பைச்சொன்னவ ரேகாணும்அந்த
தென்னிலங்கை யென்பதுதானும்

யிருப்பதெந்தவிடங்காணும் அதற்
கெப்படிப்போனால் தடங்தோணும்.

கண்டிகொழும்பு மிருப்பதெங்கே யிந்த
கார்க்கடல்மத்தியில்த் தீவுமிங்கே
உண்டானகாரணந் தானுமையா அந்த
உண்மையைச்சொல்லவும் வேணுமையா.

சொல்லுகிறேன்கேளடி யின்னாளேதேவர்
சொன்னசபதத்தால் முன்னாலே
வெல்லவேமாருதம் விசையிலே தள்ள
மேருமுடியிந்தத் திசையிலே.

வந்துவிழுந்த யிடமாச்சுயிந்த
வாரிக்குமேலே திடலாச்சு
உந்திக்கமலத் துதித்தவருங்கண்டு
உள்ளத்திலெண்ணி மதித்தவரும்.

ஏழுசுற்றுக்கோட்டையாக்கியே யிதற்
கிலங்கையென்னும் பேர்தாக்கியே
ஆளுமென்றுமன நற்பாலேசொல்லி
ஆண்டருபேரனுக் கிப்பாலே.

ராணுவத்தோடே ஜெயம்பூண்டான்மன்னன்
ராவணன்தென்னிலங்கை யாண்டான்
போனதிரையதா யுகத்திலேவந்த
பொற்கொடிசீதையை வனத்திலே.

கண்டுசிறையெடுத் தோடிவந்தான்ராமன்
கவிப்படையுடன் தேடிவந்தான்
நின்றுகடலைக்கண் டேதிகைத்தான் அந்த
நேரம்வருணனையு மழைத்தான்.

சீதையினாலே மனமூசந்துராமன்
தெர்ப்பசயன மதிலிருந்து
ஆதிசேதுவெனப் பேர்பொருதிக்கன்னி
யாகுமரியெல்லை கண்டறுதி.

பரப்பிலேபத்து யோசனையாய்கவிப்
படைமலைகொண்டதற்கிணையாய்
உரத்துயோசனை நாறுமட்டும் அணை
உண்டுபண்ணிலெங்கைக் கோட்டைமட்டும்.

நடந்திலங்கையைக் கண்டபின்புராமன்
ராவணனைக்கொன்று சென்றபின்பு
அடர்ந்தராட்சதக் கும்பழியதிரு
வணைசிதறுண்டு தான்மறைய. ௩௪

பின்னுமிலங்கையைச் சீராக்கித்தவப்
பெருமையால் கொஞ்சம்பேராக்கி
அன்னாள்விபூஷண னுண்டுவிட்டார்பின்பு
அண்டருலகத்தைச் சார்ந்துவிட்டார். ௩௫

நாட்டமுள்ளகயல்க் கண்ணாளேயிலங்கை
நகரம்நாள்சென்று பின்னாலே
கோட்டையழிந்து கடலாச்சுமிது
கொஞ்சமாய்த்தீவிங்கே யுண்டாச்சு. ௩௬

அப்பாலித்தீவு சீரில்லாமல்மிதில்
ஆளவொருவரு மில்லாமல்
ஒப்பாதகாடு மலையாச்சுபெரி
யோர்களுலாவு மிடமாச்சு. ௩௭

நயமிருந்த பெருங்காடுவெகு
நாளாயிருந்தபின் பிற்பாடு
மியக்கரென்றொரு ராட்சதனும்மிதில்
மிருந்தரசிட்டான் யேச்சவனும். ௩௮

நத்தியேநாகர் சிலர்காலமேல்
நாட்டையாண்டுவருங்காலம்
புத்தரும்வந்திதில் நாடினார்சிலர்
புத்தர்மதத்தைக் கொண்டாடினார். ௩௯

திசைபுகழ்வங்க தேசாதிராசன்
சிங்கவாகுபெத்த ஞாயாதி
விஜையராசனும் வந்தாண்டிபூமி
விஸ்தாரங்கண்டு மகிழ்ந்தாண்டி. ௪௰

தலைமன்னாரென்று பேட்டைக்கட்டிராஜன்
தம்பனைநாடென்றுகோட்டைகட்டி
சிலைவலிமைக் கொண்டாடக்கண்டு
தென்னனியக்கர்மகள்கூட. ௪௧

செப்பமுடனிதை யாளவந்தான்வங்க
தேசத்ததிபன் மகனிவன்தான்

அப்பாலித்தீவுக் கரசரடிவந்து
ஆண்டவர்கள் வெகுபேர்களடி.
வங்காளர்சிங்காளர் வெள்ளாளர்பிந்து
மதசமையத்து வல்லாளர்
யிங்கேவந்துகுடி யேறினார்யிதர்க்
கிசைசந்தரசரு மீறினார்.
சிங்களப்பாஷையு மேலாச்சுயிதில்
சிவசமையமு முண்டாச்சு
மங்கையரேசில ராஜாக்கள்புத்தி
மதசமயத்தை மேலாக்க.
பாண்டிசோழதேசத் தீரர்களும்வந்து
பட்டமாண்ட முடிவீரர்களும்
வேண்டியகோட்டைகள் கட்டிக்கொண்டார்மாதம்
வேறுசெய்பசண்டை யிட்டுக்கொண்டார்.
பாவையேயெங்கும் நகராச்சுநல்ல
பாருலகத்திலே பேராச்சு
மேவும்சிவஸ்தல மெத்தவுண்டுயர்ந்த
விஸ்தாரஞ்சொல்லவு முத்தியுண்டு
உன்னிதமான மலையுமுண்டு யிதி
லோங்கும்சிவனடி பாதமுண்டு
முன்னீஸ்புரம்வெகு முக்கியமாம்அதில்
மூலகணேசன் சிலாக்கியமாம்.
கேட்டவர்க்கே யனுகூலமாம்திருக்
கேஸ்புரமென்றொரு தானமாம்
நாட்டமுள்ளநகு லேஸ்புரமாம் சிவ
நாதனுகந்தகோணேஸ்புரமாம்.
தண்டேஸ்புரம்வெகு தகுதியாம்ஐயன்
சாத்தாக்கோவிலொரு பகுதியாம்
எண்டிசைமெய்த்த குமரபுரம்புக
ழிலங்கும்சந்திர சேகரபுரம்.
கண்டலர்மெய்த்த மாவிட்டபுரம்ராஜ
கர்த்தரால்செய்த தனேகபுரம்
தொண்டர்துதிக்கும் தலங்களிதாம்யின்னம்
தோணுதிருப்ப தனேகமதம்.

ராமேஸ்புரமிதைச் சேர்ந்ததடி முன்னே
ராமனுதனாலமைந்ததடி
பூமிக்குருத்தான மன்னர்மெத்தபட்டம்
பூண்டரசிட்ட நகரமெத்த. ௫௧

கண்டியென்றும்கோட்டைக் காடிதென்றுநல்ல
கழனிநீர்கொழும் பூரிதென்றும்
அண்டியவூரெல்லாம் கட்டடமாம்கோட்டை
அனுராசபுரபட்டணமாம். ௫௨

முத்துச்சலாவத் துறையுமுண்டுகடல்
முழுகிச்சங்கு குளிப்பதுண்டு
ரெத்தினபுரியென்று ஊருமுண்டு அதில்
ரெத்தினமணிகள் விளைவதுண்டு. ௫௩

பன்னகாமமதும் பறைநாடாம்பாழ்ப்
பாணப்பகுதி வெகுகாடாம்
இன்னமிருக்குதனேகமெல்லாமிப்ப
பெனக்குச்சொல்லச் சமயமில்லை. ௫௪

கண்டவிடமெல்லா மூராச்சுகோவில்
கட்டியகட்டடம் பேராச்சு
இண்டுமுண்டாப்பளி கொண்டார்கள்நல்ல
சிங்களரோடர சாண்டார்கள். ௫௫

கண்டியையாண்டிடும் வீரதுங்கனிதில்
கட்சிவிக்ரம ராஜசிங்கன்
தண்டிகையேறிய சூரர்களும்மிவன்
தலைமுறைவரை ராஜர்களும். ௫௬

தொண்ணூத்தாறுமுடி மன்னரடி அதைச்
சொல்லுஞ்சரித்திர மின்னமடி
விண்ணவர்மெய்த்திடு மானகரில் மிதில்
மேவியரசிட்ட பேரவரில். ௫௭

கண்டியரசனும் பின்னாலே அவன்
கட்டடம்காணலாம் கண்ணாலே
வண்டனதியாய்க்காரனடி அவன்
வம்மிஷம்நாய்க்க ராஜனடி. ௫௮

அதற்குமுந்திய ராஜர்தொடுக்கட்டி
ஆண்டவிடமெல்லாம் சீருகெட்டு

மதிப்பதாக்கிடத் தோணு மலைக்காடு
மண்டியிருப்பதும் தானுமே.
இங்கிர்தன்வீரத்தில் சூரசிங்கன்யிந்த
இலங்கைநாடெல்லாம் ராஜசிங்கன்
சங்கையுடனர சாளையிலேசிமை
தன்னிலிருந்தந்த வேளையிலே,
இங்காரக்கப்பலில் பறங்கியே யிந்த
தீவுக்குள்ளேவந்து யிறங்கியே
தங்கச்சிகரம் தனைவகுத்துப்புத்தர்
தாவுங்கழனித் திசைபடுத்து.
கோட்டையுங்கட்டிக் கொடிபூட்டியதைக்
கொழும்பென்றுசொல்லி பேர்நாட்டி.
வேட்டெழுப்பிக்காலிக் கோட்டைகட்டிநல்ல
விஸ்தாரமாத்திர பேட்டைகட்டி.
தொட்ட திருக்கோண மாமலையும்அந்த
துறைமுகங்களை யாண்டதையும்
ஒட்டாமல்த்தள்ளி விரைவாகிவந்து
உலர்ந்தாக்காற ருசாராக.
ஆண்டுசிலகாலம் விட்டார்கள்பின்பு
ஆங்கிலேயவர்வந்து தொட்டார்கள்
வேண்டியதர்மம் நிலைநிறுத்தயிந்த
மேதினியையெல்லாம் சீர்திருத்த.
கும்பமுனியார்வந்து ஓட்டிக்கொண்டார்யிந்த
கொழும்புகோட்டையைக் கட்டிக்கொண்டார்
வம்பானகாட்டையும் வெற்றிலுத்ரூர்கோடு
வங்காளக்கச்சேரி கட்டலுற்றூர்.
கண்டியரசனைக் கெடுத்திட்டார்பெருங்
கள்ளர்களைச்சுட்டு பருத்திட்டார்
வண்டிக்கிறேட்டுக ளுண்டுபண்ணியிதில்
மாகாணங்களாய்த் துண்டுபண்ணி.
துறைமுகங்களை நோக்கிகாப்பித்
தோட்டங்களையெல்லாம்சீராக்கி
நிறையயிந்தியாச் சனங்களும்நேகு
நிறைந்த நீர்வைப் பணங்களும்.

மின்னல்வேகங்கொண்ட தந்திவைத்தார்பேசி
விளம்பும்ஆபீசை மூர்திவைத்தார்
என்னசொல்லுவேனடி மின்னரசேயிந்த
இங்கிலீஷ்காரர் தன்னரசை. ௬௮
பூட்டிறயிலையும் நடத்தினர்யெங்கும்
புகைவிளக்கையும் பொருத்தினர்
தாஷ்டிகமான கடலிலேக்கியூட
தடுத்தணைகட்டி யேநெருக்கி. ௬௯
தண்டவாளச்சூட்சம்வைத்தாரே மலைத்
தண்ணீரைவாவென் றழைத்தாரே
மண்டலத்தில்புகழ் பெற்றதடிகப்பல்
வாறதனேகமாய் நித்தமடி. ௭௰
தண்டமிழ்சேர்புவி பெத்தவளாம் யிந்தியா
சக்கரவர்த்திப்பட்டம் பெற்றவளாம்
லண்டனரசாட்சியைச் செலுத்தும்மகா
ராணிகட்டளைப் படிநடத்தும். ௭௧
இங்கிலீஷ்காரரா லேயல்லோநம்ம
இந்தியாவும்லெங்கைத் தீவுமல்லோ
கங்கையும்சிங்காரமுண்டாச்சு வெகு
தாழ்வில்லாவாழ்வுக ளுண்டாச்சு. ௭௨
பூமியில்கள்ளர் பயம்போச்சு வெகு
புத்தியும்வித்தையு மேலாச்சு
சாமிகதிரேசன் தன்னருளால் ஒரு
தாழ்வொன் றுமில்லையே தோழிப்பெண்ணே. ௭௩
தாழ்வில்லாத்தண்மை யுடன்வாழும் கவி
சாற்றியமன்னவ ரேகேளும்
ஆளுங்கதிரேச னித்தலத்தில்வந்த
ஆரம்பத்தின்கதை சொல்லுமையா. ௭௪
ஆரம்பமென்ன புராணத்திலேகதை
அறிந்தமட்டுமின் னோரத்திலே
கூறவுங்கேளுங்கோ பெண்ணாரேவர்ன்ன
கோலவிழிக்கயல்க் கண்ணாரே. ௭௫
அண்டமெல்லாமொரு தகத்திலேகட்டி
ஆண்டகிரேயதா யுகத்திலே

கொண்டாசாட்சினைச் செலுத்தியேதேவர்
கோனைவெருட்டியே கொளுத்தியே.
பாரவினையாளுக் கொஞ்சாதவெகு
படைப்பெருக்கத்துக் கஞ்சாத
வீரப்பிரதாப மிகப்பூண்டமன்னன்
வீரமயேந்திர புரமாண்ட.
வாசமுள்ளசூர னாலேயிலே அவன்
வந்துபோர்செய்திடும் வேளையிலே
பாசரைவிட்டு மிதில்தாண்டி கந்தன்
படைப்பெருக்க மிதில்த்தாண்டி.
குன்றெனும்சூரைத் தூக்கினார்தேவர்
கோனுக்காசை யுண்டாக்கினார்
அன்றுமுதல்கந்தன் வாசமடியிதில்
அண்டர்களும் விசுவாசமடி.
காமன்மைத்துனனைத் தொண்டுபண்ணிக்கதிர்
காமமென்றேபேரை யுண்டுபண்ணி
மாமுனிவோர்கள் கொண்டாடிவந்தநம்ம
வள்ளிபனுள னிஙன்தாண்டி.
மன்னவரேகவி சொன்னவரேயிங்கே
வாருமையா சொல்லக் கேளுமையா
மின்னியவேலவ ரைவாழ்ந்தமுறை
விளங்கச்சொல்லும் பணிந்தேற்ற.
விளங்கும்தீப தெரிசனமும்தவில்
மேளம்தவண்டை முரசினமும்
முளங்கும்சன்னதி முன்பாகச்சென்று
மூலஸ்தானத்தைப் பாருங்கடி.
மூலஸ்தானந் தெரியாமேசபை
முன்ஸ்தலமண்டபம் தோணுமே
சிலமிருகந்தன் சன்னதியிலிட்ட
திரைமறைப்பிங்கே யேதுக்கையா.
திரைமறைப்பு வளமையடிகந்தன்
சேவடிகாண்ப தருமையடி
முறைதெரியாத மானிடர்க்குக்கந்தன்
முன்மணிவாசனுந் தோணுது.

மூன்மணிவாசல் கடக்கணுமேசுவாமி
மூலஸ்தான மடுக்கணுமே
நன்மையுகந்த கதிரேசன் தனை
நானறியவகை சொல்லுமையா. ௮௫

நானுமறிந்தது மில்லையடிசொன்ன
நம்புவையோவெந்தன் சொல்லையடி
தேனருந்தவழி தோனுட்டல்கந்தன்
சேருவைகாண முடியாது. ௮௬

சேருவைகாண முடியாவிட்டால்யிந்தச்
சிங்களவரெனும் ஸ்தானிகர்கள்
ஆறுமுகவ னறியாமல்நிதம்
ஆருக்கலங்காரம் செய்வார்கள். ௮௭

ஆருக்கென்றால்வர்ணப் பேளையொன்றுஅதற்
கன்புற்றலங்காரம் செய்துகொண்டு
பாரியகேடக மீதேற்றிவீதி
பவனிவாரது முண்டுமடி. ௮௮

பவனிவந்திடும் பேளையதுயென்ன
பாவினையாகவே சமைந்தது
அவனியெலாம்புகழ்ந் தேற்றபேளைக்
கருள்நிறைந்ததெவ்விதங்காண். ௮௯

அருள்நிறைந்து சமைந்தவித்தைவெரு
அந்தரங்கமிந்தப் பெட்டகத்தை
குறிவறிந்து திலக்காவிட்டால்கண்டு
கொள்ளமுடியாது வன்னலையே. ௯௦

வள்ளலுகந்திடும் கோவிலுக்குமுழு
வச்சிரத்தட்டோடி போடாமல்
தெள்ளியமாமணி மேடையெல்லாம்செய்து
செப்போடிட்டது மேதுக்கய்யா. ௯௧

செப்போடல்லவே தோழியரேயிது
சிவந்தபத்தரை மாத்தாகும்
ஒப்பாதபுவி மானிடர்க்குயிது
செப்போடாகவே தோணுமடி. ௯௨

செப்போடிட்டதை மாத்தையிலேபின்னும்
சீர்திருத்திவரி சாத்தையிலே
அப்போதங்குள்ள மூலஸ்தானத்தை
அறிந்துகொள்ளாரோ சொல்லுவையா.

அறிந்ததுண்டைய லுத்தரவால்பன்னி
ராண்டுக்கொருதர மாத்தினவர்
உரியசுத்தமவு னங்கொண்டுசமா
துகந்தடைந்தவர் கோடியுண்டு.

கோடிபேருண்டென் றும் சொன்னவரேகந்தன்
கொலுவில்மகிமையும் சொன்னவரே
தேடிக்கொண்டாடும் கதிர்மலைமேல்கந்தன்
சேருவைச்சேகர மெப்படிகாண்

சேகரமான மலைகளுண்டுசுத்தி
திரண்டிருண்ட வனங்களுண்டு
ஏகமிருக சஞ்சாரமடிமலைக்
கிசைந்துபோனவ ரில்லையடி.

போனவரந்த மலைவளத்தைச்சொல்லி
புகழக்கேட்டே னதின்விதத்தை
ஆனலவரெப் படிப்போனர்போக
லாகாதென்றெவ்விதம் சொல்லுவீர்காண்.

ஆகாதென்றது மெய்தாண்டிமுரு
கையனுத்தரவி னல்தாண்டி
யேகினலந்தக் கதிர்மலைக்கிவழி
யிசையத்தோணு மிருள்விலக்கி.

யிசையும்நல்ல வழியுமென்றீர்முன்னே
யேகமிருகசஞ் சாரமென்றீர்
திசைக்கிச்செல்லாமல் தட்டிடுமோகண்டு
சேரும்படிவழி விட்டிடுமோ.

விட்டுவிடாதது மெய்யதற்க்கேகதிர்
வேலவனுத்தர வானவர்க்கே
தட்டுப்படாது மிருகமெல்லாம்வனம்
தாண்டியேயேறி நடந்திடலாம்.

நடந்துகாணுவ தெந்தமலைகந்த
நாதனிருப்பது மெந்தமலை
அடர்ந்தமேளத் தொனிகளுண்டோயங்கே
அண்டர்கள்கூட்ட மதிகமுண்டோ. ௱௧

அண்டர்கள்கூட்ட மதிகமுண்டு அப்பால்
ஆறுமுகன்சபையங்கேயுண்டு
கண்டாசைகொள்ளாத மானிடர்க்குசபை
காணவுந்தோணுது தோழிப்பெண்ணே. ௱௨

தோணுதென்றது மெய்யவரும்பிருள்
சூழ்ந்தவனங்கள் கடந்தவரும்
காணுதமாமலைக் கேதினவர்சபை
கண்டுதொழாமல் வருவாரோ. ௱௩

கண்டுதொழுவ தெல்லாமலையுமெங்கள்
கந்தன்கனக சபைமலையே
தொண்டரல்லால்கண்ட பேருமில்லை அங்கே
ஆடிவயிரவன் காவலடி. ௱௪

காவல்கொண்டமலைச் சார்பினிலேயெங்கள்
கர்த்தன்பவனிப் பதியினிலே
மேவும்சமாதொன் றிருக்கிறதேயதை
விளங்கச்சொல்லு மெனக்குமதை. ௱௫

சொல்லுவேன்கேளு திரைகடந்தயோகத்
துரியாதீதத் துலாகடந்த
நல்முத்துலிங்க சுவாமிக்கடி மூர்த்தி
ராஜரால்கட்டிய கோவிலடி. ௱௬

கட்டியகோவில்ச் சிறந்ததிலேகதிர்
காமம்சிவஸ்தல மானதிலே
முட்டிவணங்கி முகையதீனென்கிற
முழக்கமேதிங்கே சொல்லுமையா. ௱௭

முழக்கமான நபிவரத்தில்வந்து
முத்தியடைந்தன ரித்தலத்தில்
வழக்கமாக முசிலீன்கள்நிதம்
வந்துவணங்குந்தீன் சத்தமடி. ௱௮

தீனதுகூறிய மாபதியில்நல்ல
சித்திரவேலவன் சன்னதியில்
தானமும்தர்மமும் செய்யவென்றுயன்ன
சத்திரம்கட்டின தார்காணும்.

கட்டியமாமடம் செட்டியடிதர்மம்
கர்த்தரெனும் நகரத்தார்கள்
ஒட்டியபொதிகை யிட்டமைத்தார்புக
ழுசந்ததர்மம் மடம்சமைத்தார்

உசந்ததர்மம் மிகுத்தோர்கள்செல்வ
மோங்கும்வசிய குலத்தார்கள்
இசைந்துவந்த வரைத்தேடியன்னம்
ஈவதுமுண்டோ மனம்நாடி.

நாடியதர்மம் மிகக்கொடுத்துகந்த
நாதன்கதிரேசன் வேலெடுத்து
ஆடித்திருவிழா நாளையிலேயிவ
ரண்டுக்கொருதரம் வாரதுண்டு.

வாறதுண்டுநக ரத்தார்களென்று
மன்னவரேசொன்னீ ரின்னகரில்
ஆறுமுகன்கதி ரேசனுக்குயிது
ஆடித்திருவிழா முக்கியமோ.

முக்கியமாய்க்கதிர் காமத்தாலேசுற்றி
முக்கோணசக்கர வீதியிலே
சக்கரபாணி மருகரெனும்கந்த
சாமிதிருவிழாக் கூட்டமடி.

கூட்டமும்பாட்டமும் கொண்டாடும்குடை
கொடிவிருதுகள் நின்றிடும்
நாட்டமுடைய திருநாளில்நிதம்
நடக்குகின்ற வளமையென்ன.

வளமைவேழத்தின் மேல்மிகுந்துகந்தன்
மாணிக்கப்பேழை தனிலுகந்து
கலைதுலங்கிய வீதியிலேவரும்
கந்தன்பவனியைப் பாருங்கடி.

கந்தனுக்கேற்ற திருநாளிலிந்தக்
காசினியோரும் வரும்நாளில்
செந்தமிழோர்களும் கொண்டாடக்கந்தன்
தேருமேலேறுவ தென்றைக்கையா. ௱௰௭

தேருமேலேறும் வன்மையில்லைச்சித்திர
தேருமிழுப்பது மிங்கேயில்லை
நேருடன் தண்டிகை மீதேறிசுவாமி
நீரறப்பானதைப் பாருங்கடி ௱௰௮

நீரறப்பென்றதும் தோன்றலைபேசிப்போ
நீர்சொன்னபாஷை விளங்கிலையே
தேருமின்றூட்டு வன்மைகளோயிதைச்
சீருடனேசொல்ல வேணுமையா. ௱௰௯

சீருள்ளமாணிக்க கெங்கையிலேசுவாமி
தீர்த்தங்கொடுத்தருள் செய்யயிலே
நேருள்ளசிங்களப் பாஷையிலேயிதை
நீறரப்பேயென்பதும் மெய்தாண்டி. ௱௨௰

மெய்யான ஆறு முகவரெனுமசுவாமி
மேவியவள்ளி தெய்வானையனும்
தையலர்மேவும் கதிர்காமந்தனை
தான்கண்டபேருக்கு முத்தியுண்டோ. ௱௨௧

முத்தியுண்டுவினைத் தாவுபடிதவ
முத்தர்புகழ்கதிர் காமம்வந்தால்
சித்தியுமுத்தியு முண்டாகும்பணி
சேராதருள்வார் முருகேசன். ௱௨௨

கேசவன் தன்னரு மைக்குரியவள்ளிக்
கிசைந்தகந்தன் புகழ்புரிய
வாசமிகுந்த தமிழதனைச்சொன்ன
மன்னவரே யுமக்கெந்தவூரு. ௱௨௩

மன்னர்புகழ்ராம நாதபுரம்சேது
மானகராம் திருப்புல்லாணி
நன்னயமாகிய வூர்தாண்டிதங்கம்
ராமசாமியெந்தன் பேர்தாண்டி. ௱௨௪

பேரையும் ஊரையு மேபுகழ்ந்துசொன்ன
    பேர்பெற்றமானகர் மீதிருந்து
தாருலவுங்கதிர் காமத்துக்கேகீரும்
    தனிக்கேவந்த வயணமென்ன. ௩௨௫

வந்துகொழும்பதனிற் சிறந்து-வெகு
    வாவமதாச்சில நாளிருந்து
கந்தன்பவனியைக் கண்ணாலேகண்டு
    கைதொழுதேத்தவும் வந்தேனடி. ௩௨௬

கைதொழுதேத்திய மெய்வாசன்நம்ம
    கந்தன்கதிரைமுருகேசன்
தெய்வானைவள்ளி மணாளனுமேலினி
    செந்தமிழால்துதி சொல்லுமையா. ௩௨௭

சொல்லசொல்லிக் கேட்டவர்க்குவரும்
    துன்பமகற்று மிப்பாடவர்க்கும்
தில்லையெல்லைவல்லைத் தாண்டவத்தாள்வாலை
    தேவிசிவகாமி யின்தவத்தால். ௩௨௮

அருள்பொருந்திய பூவாசன்வள்ளி
    யம்மைதெய்வானைக் கதிரேசன்
திருவிழாவிற் சிறந்தவராம்கந்தன்
    தீர்த்தங்கொடுத்தருள் தந்தவராம். ௩௨௯

தீராதநோய்களை தீர்த்தவண்டிசுவாமி
    சித்தம்வைத்துநம்மைக் காத்தவண்டி
நாரணனுக்கு மருகனிவன்ஜெக
    நாதன்செந்தூரு முருகனிவன். ௩௩௰

தேவசேனாதி பதிதாண்டிகூவும்
    சித்திரச்சேவல்க் கொடியாண்டி
மூவர்புகழ்கந்தன் சன்னதியில்நின்று
    முழங்கக்கும்மி யடியுங்கடி. ௩௩௧

சிம்மாசனத்தி லிருந்தவரைவளம்
    சேர்கதிர்காம முகந்தவரை
பிம்மானிலத்தவர் போற்றிடவேஅவ
    ரெண்ணிவந்தபடி கேட்டிடவே. ௩௩௨

செலுத்தும்வேடிக்கை பாருங்கடிகந்தன்
தீபதெரிசனம் பாருங்கடி
தலத்தில்முக்கியம் மெத்தவடிகந்த
சாமிக்கிசிங்காரம் நித்தமடி. ௱௯௩

மூப்பத்துமுக்கோடி தேவருக்கும்நல்ல
மூவருக்கும்புவி யாவருக்கும்
நாற்பத்தெண் ணாயிரம் தானவர்க்கும்தரு
நாவலர்க்கும்திசை காவலர்க்கும். ௱௯௪

சிங்காரக்கும்மி தமிழ்ச்சிறக்கும்நம்ம
செங்கைவேலன் கதிரேசனுக்கும்
மங்கையர்வள்ளி தெய்வானையர்க்கும்ஜெய
மங்களம்வாழி மிகவாழி. ௱௯௫

சித்திரவேலா யுதம்வாழிகந்தன்
சேவல்மயிலு மிகவாழி
சத்திபருள்கந்தன் சன்னிதியில்புகழ்
சாமியிடும்பனும் வாழியதாம். ௱௯௬

கதிர்காமக்கும்மி

முற்றிற்று.

உ

சிவமயம்.

மங்களம்.

ஆதியாம்பரஞ் சோதிக்கும் அபிராமிக்கும்
ஜெயமங்களம்
மாதுவள்ளி தெய்வானைக்கும் வடிவேலர்க்கும்
சுபமங்களம்
திருவுக்கும் திருமாலுக்கும் தெய்வதேவர்க்கும்
ஜெயமங்களம்
குருவுக்கும் குமரேசர்க்கும் குறமாதுக்கும்
சுபமங்களம்
மாலருள்பிர்ம தேவர்க்கும் கலைமாதுக்கும்
ஜெயமங்களம்
அலைசூழ்கதிர் காமம்வாழி முருகையர்க்கும்
சுபமங்களம்
செந்தமிழ்க்கவி யாளர்க்கும் புவியாளர்க்கும்
ஜெயமங்களம்
கந்தனாறு முகன்வேல் முருகையர்க்கும்
சுபமங்களம்.

மங்களம்-முற்றிற்று.